பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 20 வியாழக்கிழமை 05.11.2020 கதிர் 2310

## வெலிகடைச் சிறையில் கொரோனாத் தொற்று!

வெலிகடை சிறைச்சாலையின் 4 பெண் கைதிகளுக்கும், 2 ஆண் கைதிகளுக்கும் மற்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கும் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துார உபுல்தெனிய இதனைத் தெரிவித்துள்ளார்.

2

# மிக ஆபத்தான கட்டத்தில் இலங்கை; வீடுகளுக்குள் புகுந்தது கொரோனா!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, நவம்பர் 05**

**கொரோனா வைரஸால் ஏற்படும் மரணங்களுக்கு மத்தியில் இலங்கை மிகவும் ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என எச்சரிக்கப்பட்டுள்ளது.**

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளரான மருத்துவர் ஹர்த்த அலுத்கே இதனை இன்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

2



## தொற்றா நோயாளர்களுக்கான மருந்துகள் தபாலில் விநியோகம்

### வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

அரசவைத்தியசாலைகளில் சிகிச்சை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட தொற்றா நோயாளர்களுக்கான மருந்துகளை தபால் மூலம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொரோனாத் தொற்று நோயின் பரவல் காரணமாக தொற்றா நோய்களுக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளும் நோயாளர்கள் தமக்குரிய மருந்துகளைக் கிரமமாகப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதைத் தவிர்ப்பதற்காக சுகாதார அமைச்சு அஞ்சல் திணைக்களத்துடன் இணைந்து பொலிஸாரின் உதவியுடன் அரச வைத்தியசாலைகளில் பதிவு செய்துள்ள தொற்றா நோயாளர்களுக்கான மருந்து வகைகளை தபால் திணைக்களத்தின் உதவியுடன் அவர்களது வீட்டுக்குக் கொண்டு சென்று வழங்குவதற்குத்

2

## மாட்டுடன் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து

### இளைஞர் ஒருவர் படுகாயம்



வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் வீதியில் உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அதைச் செலுத்தி வந்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

2

## இரு மாவட்டங்களில் மண் சரிவு அபாயம்!

கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் காணப்படுகின்றது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மஞ்சள் விழிப்புணர்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய கேகாலை மாவட்டத்தில் ருவண்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் சில பகுதிகளிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட, எலப்பாத, இரத்தினபுரி மற்றும் எஹெலியகொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மண் சரிவு அபாயம் காணப்படுகின்றது என அந்த நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கடலில் மூழ்கவே வேண்டாம் முடிந்தால் பதவி துறவுங்கள்

### பவித்ராவுக்கு சஜித் அணி சவால்

கடலில் மூழ்கி உயிர் துறப்பதைக் காட்டிலும் சுகாதார அமைச்சர் பதவி துறப்பது மேலானது. எனவே, கடலில் குதிக்கத் துணிந்த அவர், நாட்டுக்காகப் பதவி துறக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர்

2

## தெற்கிலிருந்து வந்த 6 பேர் வவுனியாவில் தனிமையில்!

வவுனியா, கனகராயன்குளத்தில் தென் பகுதியில் இருந்து வருகை தந்திருந்த 6 பேர் சுகாதாரத் திணைக்களத்தினரால் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கனகராயன்குளம், புதூர் பகுதியில் 6 பேர் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரப்பலகையைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவினர் சந்தேகம் கொண்டு விசாரணையை மேற்கொண்டபோது அவர்கள் கொழும்பில் இருந்து

2

## வீடுகளில் இருந்து பொருள்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகள்


### யாழ். வணிகர் கழகம் மேற்கொள்கிறது

யாழ். நகரில் பொதுமக்களின் ஒன்றுகூடலைத் தடுக்கும் முகமாக சார்பான வணிகர் கழகத்தினரின் ஏற்பாட்டில் வீடுகளிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர்

2

## ஆழியவளைக் கடற்பரப்பில் 200 கிலோ கேரளக் கஞ்சா!

### சந்தேகத்தில் இரு மீனவர்களும் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, ஆழியவளைக் கடற்பரப்பில் 200 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

2

## வவுனியா கல்வி வலய சம்பள மோசடி இரண்டு கோடி 16 லட்சம் ரூபாவாம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.06

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பணியாற்றி அரச நிதியில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளவர் எனக் கூறப்பட்டவர் மோசடி செய்த தொகை 2 கோடியே 16 லட்சம் ரூபா என நேற்று வரையான விசாரணைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் முகாமைத்துவ உதவியாளராக நியமனம் பெற்ற நிலையில் கல்வித் திணைக்களத்தின் சம்பளப் பட்டியல் தயாரிக்கும் பணிக்கு அமர்த்தப்பட்ட போது சம்பளத்தின் உண்மைப் பெறுமதியை உரியவர்களின் கணக்கில் வைப்புச் செய்த போதும், மேலதிகொடுப்பனவு, படிஎனக்கணக்கிட்ட தொகையினை வங்கியின் ஊடாக தனது கணக்கில் இவர் வைப்புச் செய்து மோசடியில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது..

இந்த மோசடியில்

2

## தெற்கிலிருந்து வந்த 6 பேர் வவுனியாவில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த 29 ஆம் திகதி வருகை தந்திருந்தமை தெரியவந்தது.

இந்தநிலையில் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் அவர்கள் தாம் தங்கியிருந்த இடங்களை மறைத்திருந்த போதிலும் சுகாதாரத் திணைக்களத்தினரின் தீவிர விசாரணையில் அவர்கள் கனகராயன்களத்தில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்ததுடன் கனகராயன்குளத்தில் உள்ள பல வர்த்தக நிலையங்களுக்கும் சென்று வந்துள்ளனர். இதையடுத்து குறித்த 6 பேரும் அவர்கள் கனகராயன்குளத்தில் தங்கியிருந்த விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, அவர்கள் சென்று வந்த வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பகுதியினரால் மூடப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்களும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## ஆழியவளைக் கடற் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படை டோறாப் பிரிவினரால் இன்று ஆழியவளை கடற்பரப்பிலிருந்து ஆறு கிலோ மீற்றர் எல்லைக்குள் வைத்து இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து சுமார் 20 இற்கும் மேற்பட்ட பொதிகள் செய்யப்பட்ட 200 கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள், பளைப் பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா கல்வி வலய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டமைஊழியர்மேற்கொண்டகணக்கு நடவடிக்கைகள் யாவும் மீளாய்விற்கு உட்படுத்தும் பணி துரிதமாக இடம்பெறுகின்றது. இதன்படி நேற்று வரை கண்டுபிடிக்கபட்ட பெறுமதி 2 கோடியே 16 லட்சம் ரூபா என பொலிஸாரிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வயைக் கல்விப் பணிப்பாளரினால் நேற்றுக் காலை சமர்ப்பித்த முறைப்பாட்டு அறிக்கையிலேயே இந்தப் பெறுமதி காட்டப்பட்டுள்ளது. இதேநேரம் இந்த மோசடியில் ஈடுபட்ட நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீடுகளில் இருந்து .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆர்.ஜெய சேகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு மாகாணத்திலும் இந்தக் கொரோனாத் தாக்கம் அதிகரித்துக் கொண்டு வருகின்ற காரணத்தால் நகரத் துக்கு வரும் பொதுமக்களை இயன்ற அளவு குறைக்குமாறு சகல தரப்பினரும் கேட்டுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக பஸ் போக்குவரத்து தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சில வேளைகளில் தொடர்ந்து இன்னும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படலாம். அதேநேரத்தில் யாழ்ப்பாணம் நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் இயல்பாக இயங்கிக்கொண்டு இருக்கின்றது. ஆனால், அங்கே வருகின்ற பொதுமக்களின் அளவை இயன்ற அளவு குறைக்குமாறு நாங்கள் வர்த்தகர்களைக் கேட்டிருக்கின்றோம்.

ஏனென்றால் அதிகளவில் மக்கள் கூடாமல் இருக்குமாறு பொதுமக்களுக்கு கோரிக்கை விடுக்கின்றோம். அதன் காரணமாக அத்தியாவசியப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் மற்றும் உணவகங்களில் இருந்து உணவுகள் தேவைப்படும் பொதுமக்களுக்கு வியாபார நிலையங்களின் தகவல்களை உங்களுக்கு வழங்க இருக்கின்றோம். விரும்பினால் நீங்கள் குறித்த கடைகளுடன் தொடர்புகொண்டு உங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ள முடியும்.

தற்கால சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் நகரின் மத்தியில் மக்களின் ஒன்றுகூடலைத் தடுக்கும் முகமாக யாழ். வணிகர் கழகத்தினரால் குறித்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, பொதுமக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். - என்றார்.

## கடலில் மூழ்கவே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஹ்மான் சவால் விடுத்துள்ளார்.

தான் கடலில் மூழ்கிப் பலியானால் கொரோனா வைரஸ் ஒழியுமெனில் அதனைச் செய்வதற்கும் தயாரென சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. இந்த நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தோல்வி கண்டுள்ளது. நிலைமை இப்படி இருக்கையில் நகைச்சுவைத்தனமான அறிவிப்புகளை சுகாதார அமைச்சர் விடுக்கின்றார். அவர் கடலில் மூழ்க வேண்டிய தேவையில்லை. பதவி விலகி சிறப்பாகச் செயற்படக்கூடிய ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்கினாலே அது பெரும் உதவியாக இருக்கும்.

கடலில் மூழ்குவதாக சுகாதார அமைச்சர் கூறிய பின்னர, இலங்கைக் கடற்பரப்பில் திமிங்கிலங்கள் கரையொதுங்குவதைக் காணமுடிகின்றது. எனவே, அவர் கடலில் மூழ்க வேண்டியதில்லை. நாடு மீது அக்கறை இருந்தால் பதவி துறக்க வேண்டும். அதனை அவர் செய்வாரா? - என்றும் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

## தொற்றா .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானித்துள்ளது.

எனவே, வடக்கு மாகாணத்தின் அனைத்து அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை நிலையங்களில் தொற்றா நோய்களுக்காக சிகிச்சை பெறும் நோயாளர்கள் தங்களுக்குரிய வைத்தியசாலைகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அவர்களின் சரியான பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பதிவு செய்யப்பட்ட சிகிச்சை நிலைய இலக்கம் (கிளினிக் இலக்கம்) என்பவற்றை அறிவித்து தமக்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் உரிய தொலைபேசி இலக்கங்களைப் பின்வரும் வழிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கம்:- 021 222 6666

வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் www.np.gov.வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் முகநூல் (முகவரி COVID 19, PDHS, NP)

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட வழிமுறைகளினூடாக தங்களுடைய மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் ஏதாவது சிரமங்கள் ஏற்படின் அவசர தொலைபேசி இலக்கத்துடன் (021 222 6666) தொடர்பு கொள்ளவும் - என்றுள்ளது.

## மாட்டுடன் மோதுண்டு ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று அதிகாலை 12.40 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

இரவு நேர வேலைக்குச் சென்ற குறித்த இளைஞர் கடமைகளை முடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வீரபுரம் நோக்கி வவுனியா செட்டிக்குளம் பிரதான வீதியூடாகச் சென்றுள்ளார். சூடுவெந்தபுலவுப் பகுதியை அண்மித்த சமயத்தில் வீதியில் உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 26 வயதுடைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த உளுக்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளைப் பொலிஸ் நிலையத்துக்குப் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர். (100)

## மிக ஆபத்தான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மிகவும் குறுகிய காலத்தில் 11 மரணங்கள் பதிவாகியிருக்கின்றமை பாரதூரமான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்குள் கொரோனாத் தொற்று ஏற்பட்டு 9 மாதங்களில் 13 மரணங்களே பதிவாகியிருந்தன. ஆனால், இரண்டே வாரங்களில் 11 மரணங்கள் தற்போது வரை பதிவாகியிருக்கின்றன.

இதில் பலர் வீட்டில்தான் மரணித்திருப்பது சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

அதனால் கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறி தற்போது வீடுகளுக்குள் வந்துவிட்டது - என்றார்.

## வெலிகடைச் சிறையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றாளர்கள் வெலிகந்த சிகிச்சை மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## இழுபடும் அமெ. தேர்தல் முடிவு

பெருந்தன்மையாக நடப்பதை பேச்சுக்கு ‘வெள்ளைக்காரத் தனம்’ என்று சொல்வதுண்டு.

ஆனால் அத்தகைய வெள்ளைக்காரர்கள் மத்தியிலிருந்து சிறுமைத்தனங்களும் வெளிப்பட்டு விடுவதுண்டு.

ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகள் குறித்தும் வாய் கிழியப் பேசும் – உலக நாடுகளுக்குப் போதிக்கும் – மேற்குலகச் சக்கரவாதியான அமெரிக்காவின் ஜனநாயகம் பலரையும் சிந்திக்க வைத்திருக்கின்றது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயகத் தேர்தல்களில் ஒன்றாகக் கருதப்படும் அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்து முடிந்து விட்டது.

வாக்குகள் எண்ணும் பணி இரண்டு நாள்கள் கடந்தும் இன்னும் முடிவைத் தீர்மானிக்க முடியாத இழுபறி நிலை.

முன்னைய அதிபர் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை நிலைமை வேறுபட்டது.

உலகப் பெருந்தொற்றாக – கொள்ளை நோயாக – கொரோனா வைரஸ் பரவி ஆள்கொல்லியாக மாறியுள்ள நிலையில் –

அதனால் உலகில் மிக அதிகமான அழிவையும், இழப்பையும் அமெரிக்கா சந்தித்திருக்கையில் –

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அமெரிக்காவையும் அதன் மூலம் உலக வல்லாதிக்கத்தையும், வழி நடத்தப் போகும் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றிருகின்றது.

பெருந்தொற்று ஆபத்துக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்படுவதால், வாக்காளர்கள், வாக்களிப்பு நாளில் வாக்களிப்பதற்காக ஓரிடத்தில் கூடுவதைத் தவிர்ப்பதற்கு அமெரிக்காவின் பல குடியரசுகளும் நடவடிக்கை எடுத்தன.

தபால் மூலம் வாக்களித்தல், மின் அஞ்சல் மூலம் தமது வாக்கைச் செலுத்துதல் என்று மாநிலத்துக்கு மாநிலம் இதற்காக வெவ்வேறு வழிமுறைகள், விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

அதுவே இம்முறை வாக்கெண்ணும் நடவடிக்கைகளை சில இடங்களில் தாமதிக்கப் பண்ணியதாகக் கூறப்படுகின்றது.

நாற்பத்தியெட்டு மாநிலங்களில் இன்னும் ஆறே ஆறு மாநிலங்களில் இறுதி முடிவு வரவில்லை. அந்த முடிவுகளில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற நிலைவரம்.

முன்னர், பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது – 2009 முதல் 2016 வரை – அவரின் உப ஜனாதிபதியாக இருந்த ஜோ பைடனுக்கும், தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கும் இடையில் மிக நெருக்கமான கடும் போட்டி. ‘நீ முந்தி, நான் முந்தி’ என்று இருவருமே வெற்றிக்காக இறுக்கமான போட்டா போட்டியில் உள்ளனர்.

முடிவுகள் வெளியாகவிருக்கும் ஆறு மாநிலங்களிலும் ஒரு சில ஆயிரங்களில் வரும் வேறுபாடு அடுத்த அமெரிக்க ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானித்து விடும் என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அவ்வளவு தூரத்துக்குப் போட்டி, கழுத்துக்குக் கழுத்தாக நெருக்கிக் கொண்டு நிற்கின்றது.

எனினும் இதுவரை வெளியான முடிவுகளில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன், குடியரசுக் கட்சி வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ட்ரம்பை விட மயிரிழையில் முன்னணியில் நிற்கின்றார்.

அதிபர் பதவி என்ற வெற்றிக் கனியைப் பறிப்பதற்கான வாய்ப்பும், சந்தர்ப்பமும் அதிர்ஷ்டமும் பைடனுக்கே அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அத்தகைய தேர்தல் முடிவுகளுக்கு எதிராக உடனடியாக வழக்குகளைத் தாக்கல் செய்து, சட்ட நடவடிக்கை எடுத்து, அறிவிக்கப்படும் முடிவுக்கு எதிராக முறுகிக் கொள்வதற்கு அதிபர் ட்ரம்ப் தயாராகி வருகின்றார் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பில் அந்தந்த மாநிலங்களில் இருக்கும் தமது தரப்பு ஆளுநர்கள் மூலம் விரைந்து வழக்குத் தாக்கல் செய்ய அதிபர் ட்ரம்ப் தயாராகி விட்டார் என்றும் கூறப்பட்டது.

எது, எப்படியென்றாலும், நவநாகரிகத்தின் தொட்டில் என்று கருதப்படும் – தொழில்நுட்ப வசதியின் உச்சியிலிருக்கும் – அமெரிக்க போன்ற ஒரு மேற்குலக நாட்டில் தமது ஜனநாயகத் தேர்தலை, சர்ச்சைகள், குழப்பங்கள், குளறுபடிகளின்றி நடத்தவும், இயன்ற விரைவில் வாக்குகளை எண்ணி முடிவுகளை அறிவிக்கவும் முடியாத நிலைமை இருப்பது வெட்கக் கேடானது.

ஜனநாயகத் தேர்தல்கள் என்றாலே குழப்பமும், குத்து வெட்டும்தான் என்று கருதும் நிலைமையே எங்கும் உள்ளது.

இங்கும்தான், வெள்ளைக்காரர்களின் மேற்குலக தேசம் என்றாலும் இதுதான் நிலைமை போலும்.

# அரசு தனது தேவைகளுக்காக முஸ்லிம்களை வளைக்கின்றது!

## வேலுகுமார் குற்றச்சாட்டு



அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மட்டும் முஸ்லிம் அரசியல்வாதிகளை வளைத்துப்போடும் கோட்டாபய அரசாங்கம், இன்னும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளைக் கைவிடவில்லை என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (புதன்கிழமை) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

சிறுபான்மையின மக்களை அடக்கி, ஒடுக்கி, அவர்கள் தொடர்பில் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், தொடர்ந்தும் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் என்ற நெருக்கடியான சூழ்நிலையிலும்கூட இனவாதத்தையும், குறுகிய அரசியல் நோக்கங்களையும் ஆட்சியாளர்கள் கைவிடுவதாக இல்லை. உலகில் ஏனைய நாடுகளில் அனைவரும் ஓர் சமூகமாக இணைந்து இந்த சவாலை எதிர்கொள்கின்றனர். ஆனால் இங்கு சமூகங்கள் பிரிக்கப்படுகின்றன, பழிவாங்கப்படுகின்றன.

முதலாம் அலையின்போது முஸ்லிம் மக்களே வைரஸைப் பரப்புகின்றனர் என்ற விம்பம் உருவாக்கப்பட்டது, அதுமட்டுமல்ல கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்குகூட அனுமதி மறுக்கப்பட்டது. பலவந்தமாக சடலங்கள் எரிக்கப்பட்டன. திடீரென உயிரிழந்தவர்களின் சடலங்கள் கூட கொரோனா சந்தேகத்தில் எரிக்கப்பட்டன. இது முஸ்லிம் மக்களின் மத விவகாரங்களுக்கு முரணான செயலாகும்.

கொரோனா தொற்றாளர் ஒருவர் உயிரிழந்தால் அவரின் சடலத்தை அடக்கம் செய்யலாம் இல்லாவிட்டால் எரிக்கலாம் என இரண்டு நடைமுறைகளையும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது. விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளின் பின்னரே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால் உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையைக்கூட கருத்திற்கொள்ளாமல் முஸ்லிம் மக்களைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்தும் சடலங்களை இந்த அரசாங்கம் எரித்துவருகின்றது.

தேர்தல் காலத்தில் ராஜபக்ஷக்களாலும் அவர்களின் சகாக்களாலும் கொடூரமானவர்கள் எனச் சித்திரிக்கப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகளிடம், 20 ஐ நிறைவேற்றுவதற்கு உதவிபெற்றுள்ளனர். அதாவது அரசியலுக்காக தாங்கள் எதையும் செய்வோம் என்ற செய்தி இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் சமூகத்தை வதைக்கும் இந்த அரசாங்கத்துக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேசக்கரம் நீட்டியமை வேதனையளிக்கின்றது. குறைந்தபட்சம் கொரோனாவால் ஒருவர் மரணித்தால்கூட அவரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்திருக்கலாம். அதனை செய்யாமல் ஆதரவு வழங்கிவிட்டு தொடர்ந்தும் கையேந்தும் நிலைமை காணப்படுகின்றது.

அதேவேளை, முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கை, பண்பாடுகளுக்கு மதிப்பளித்து, உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியும் வழங்கப்படவேண்டும்.- என்றார்.

## ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டு 2 ஆயிரத்து 393 பேர் கைது!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று (வியாழக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகியே பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதன்போது 18 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பாக மொத்தமாக இரண்டாயிரத்து 393 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், 356 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக மொத்தமாக 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஆனமடுவவில் விபத்து; பொலிஸ் அதிகாரி சாவு!

புத்தளம், ஆனமடுவ பகுதியில் இன்று (வியாழக்கிழமை) அதிகாலை ஏற்பட்ட வாகன விபத்தொன்றில் ஆனமடுவ பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பாளர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இந்த விபத்தில் ஆனமடுவ குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரியும் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரி 38 வயதுடைய நிக்கவெரட்டிய பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

சட்டவிரோதமாக கால்நடைகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றை துரத்திச் சென்ற வேளையிலேயே பொலிஸார் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் சுற்றுவட்ட கட்டடத்தில் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திமிங்கலங்களை திருப்பி அனுப்ப உதவி செய்தவர்களுக்கு ஜனாதிபதி நன்றி பாராட்டு!

பாணந்துறை, வட்டுவ பிரதேச கடற்பரப்பின் ஆழமற்ற பகுதியில் கரையொதுங்கிச் சிக்கித் தவித்த 120 இற்கும் மேற்பட்ட பைலட் திமிங்கலங்களைப் பாதுகாத்து மீண்டும் கடலுக்குள் திருப்பி அனுப்ப அயராது சிரமப்பட்ட அனைவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களிடத்தில் வேரூன்றியுள்ள அஹிம்சையின் நற்பண்புகளை உலகுக்கு நிரூபிக்கும் மற்றுமொரு சிறந்த வாய்ப்பாக இது அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாணந்துறை கடற்கரையில் சிக்கித் தவித்த சுமார் 120 இற்கும் மேற்பட்ட பைலட் திமிங்கலங்களை பாதுகாப்பாக காப்பாற்றி மீண்டும் கடலுக்கு அனுப்ப இலங்கை கடற்படை, இலங்கை கடலோர காவல்படை, பொலிஸ் உயிர் காக்கும் குழுக்கள், தன்னார்வ உயிர் காக்கும் குழுக்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் உள்ளிட்டோர் நடவடிக்கைகளை முன்னெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மோடியை வீழ்த்தும்வரை நான் பின்வாங்காமல் போராடுவேன்!

## ராகுல் காந்தி விடாமுயற்சி



நான் மோடியின் கொள்கைகள் மற்றும் எண்ணங்களுக்கு எதிராகப் போராடுகிறேன். அவரை வீழ்த்தும் வரை நான் பின்வாங்க மாட்டேன் என காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

இளைஞர்களுக்கு வேலைகள் வழங்கப்படும் என நிதிஷ் குமார் வாக்குறுதி அளித்தார். ஆனால் அதை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. இது தொடர்பாகக் கேள்வி கேட்கும் இளைஞர்கள் விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியும், முதல்வர் நிதி குமாரும் ஊரடங்கு காலத்தில் ஏழை மக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவவில்லை. ஆனால் இப்போது அவர்களிடமே வந்து ஓட்டு கேட்கின்றனர்.

பீஹார் மக்கள் அதை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். தேர்தலுக்குப் பயன்படுத்துவது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் அல்ல. மோடி வாக்குப்பதிவு இயந்திரம். எனினும் அவற்றை கண்டு நான் அஞ்ச மாட்டேன்.

நான் மோடியின் கொள்கைகள் மற்றும் எண்ணங்களுக்கு எதிராகப் போராடுகிறேன். பொதுக் கூட்டங்களில் மோடி என்னை பற்றி பலமுறை இழிவாக பேசியுள்ளார்.

நான் அதைப் பொருட்படுத்தமாட்டேன். அவரை வீழ்த்தும் வரை நான் பின்வாங்கமாட்டேன். – எனத் தெரிவித்துள்ளார்.

## 200 அடி ஆழ்துளை கிணற்றில் தவறி வீழ்ந்துள்ள குழந்தை!

### மீட்புப் பணிகள் தீவிரம்



மத்திய பிரதேசத்தில் ஆழ்துளைக்கிணற்றில் தவறிவிழுந்த 3 வயது குழந்தையை மீட்கும் பணிதொடர்ச்சியாக இரண்டாவது நாளாக இன்றும் (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்படுகிறது.

மத்திய பிரதேச மாநிலம் நிவாரி மாவட்டம் பிருத்விப்பூர் பகுதியில் உள்ளது சேதுபுராபரா பகுதியை சேர்ந்த ஹரி கிருஷ்ணன் என்பவரின் 3 வயது மகன் 200 அடி ஆழமான ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

பொலிஸாருக்கும், தீயணைப்பு வீரர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்ட நிலையில், அந்தக் குழந்தையை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மீட்புக் குழுவால் குழந்தையின் குரலைக் கேட்க முடிவதாக நிவாரி மாவட்ட தெரிவிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் அந்த கிணற்றில் 100 அடிக்கு கீழ் உள்ளதாகக் கூறப்படுகிறது. குழந்தை எத்தனையாவது அடியில் சிக்கியுள்ளது என்பது தொடர்பான தெளிவான தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் விராலிமலை பகுதியில் மூடப்படாத ஆழ்துளை கிணற்றில் குழந்தை சுஜித் தவறி விழுந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## லடாக் எல்லையிலுள்ள இந்திய வீரர்களுக்கு சிறப்பு உடைகள்!



லடாக் எல்லையில் காவல் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய வீரர்களுக்கு அதிகபட்ச குளிரைத் தாங்கும் அமெரிக்க சிறப்பு உடை அளிக்கப்பட்டுள்ளது.

சீனாவுடனான மோதலை அடுத்து அங்கு இந்திய இராணுவம் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக கிழக்கு லடாக்கில் புதிதாகக் கைப்பற்றப்பட்ட இடங்களில் இந்திய வீரர்கள் ரோந்து மற்றும் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு இப்போது உடலை வாட்டும் குளிர்காலம் தொடங்கியுள்ளது.

இந்த குளிரை தாங்கி பணியாற்றும் வகையில் இந்திய இராணுவத்தினருக்கு, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உடை வழங்கப்பட்டுள்ளது.

கதகதப்பூட்டும் உள்ளாடைகள், கைவிரல்களை மூடும் உறைகள், கால்களை காக்கும் கனத்த காலணிகள் என 20 வகையான உடைகளை ஒருசேர அணிந்து கொண்டு இந்திய வீரர்கள் கொட்டும் பனிக்குள்ளும் குளிரா மல் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## அமெரிக்காவின் தேர்தல் முடிவுகள் இந்திய உறவில் மாற்றம் ஏற்படாது!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மாற்றம் இருக்காது என இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர் சிரிங்லா கூறியுள்ளார்.

ஆங்கில தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த அவர், இந்தியாவுடன் நல்லுறவைப் பேண வேண்டும் என்பதில் அமெரிக்காவின் இரு பெரும் கட்சிகளுமே அக்கறை காட்டுகின்றன எனக் குறிப்பிட்டார்.

மேலும், இரு நாட்டு உறவும் பன்முகத்தன்மை கொண்டது எனத் தெரிவித்துள்ள அவர், இரு தரப்பு உறவும் வலுவாக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, நடைபெற்று முடிந்துள்ள அமெரிக்கா ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில் தற்போது முடிவு அறிவிப்பில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 3 ரக்பேல் விமானங்கள் இந்தியா வந்தடைந்தன!

பிரான்ஸில் இருந்து மேலும் மூன்று ரக்பேல் விமானங்கள் இந்தியாவுக்கு வந்தடைந்துள்ளன.

இஸ்ட்ரெஸ் நகரிலிருந்து புறப்பட்ட விமானங்கள் குஜராத் மாநிலம் ஜாம்நகர் விமானப்படைதளத்தை வந்தடைந்துள்ளன.

பிரான்ஸ் போர் விமானத்தின் மூலம் ரக்பேல் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்தியாவுக்கு வருகை தந்துள்ள மொத்த ரக்பேல் விமானங்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 28 விமானங்கள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய விமானப்படையை பலப்படுத்தும் வகையில் பிரான்ஸ் நாட்டின் டஸால்ட் ஏவியேசன் நிறுவனத்திடம் இருந்து 36 ரக்பேல் போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி ரக்பேல் போர் விமானங்கள் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டன. குறித்த விமானங்கள் செப்ரெம்பர் மாதம் முறைப்படி இந்திய விமானப் படையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1985.06.21 | பிறந்த திகதி – 1996.09.17 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – பூசம் | நட்சத்திரம் – சுவாதி |
| பாவம் – 13 | பாவம் – 38 1/2 |
| சூரி/ செவ் – 11 இல் | கல்வி – O/L |
| கல்வி – நில அளவை | தொழில் – கடை |
| தொழில் – நில அளவையாளர் | எதிர்பார்ப்பு – சாதாரண மணமகன் தேவை. |
| எதிர்பார்ப்பு – படித்த அழகான உத்தியோகப் பெண். | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

## நேபாளம் சென்றார் இராணுவத் தளபதி!



இந்திய இராணுவத் தளபதி நரவானே, மூன்று நாள்கள் பயணமாக நேபாளத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

தளபதி நரவானே, தனது மனைவியுடன் காத்மண்டு நகருக்குச் சென்ற நிலையில் விமான நிலையத்தில் அவரை நேபாள இராணுவ அதிகாரிகள் வரவேற்றனர்.

நேபாள இராணுவத் தளபதி பூரண சந்திர தாபாவை சந்தித்த நரவானே நேபாள இராணுவ அதிகாரிகள் கல்லூரியில் மாணவர்கள் இடையே சிறப்புரை ஆற்றினார்.

இந்நிலையில், நாளை அவர், நேபாள இராணுவ தளபதியுடன் பேச்சு நடத்தவுள்ளமையுடன் வரும் வெள்ளிக்கிழமை நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலியை சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, நேபாள ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் நரவானேவுக்கு நேபாள இராணுவத்தின் 'கௌரவ தளபதி' அந்தஸ்தை ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி வழங்கவுள்ளார்.

இந்திய – நேபாள எல்லை விவகாரத்தில் இந்தியப் பகுதிகள் சிலவற்றை இணைத்து புதிய வரைபடத்தை நேபாளம் அறிவித்தமையைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் தொடர்கிறது.

இந்நிலையில், இந்திய இராணுவத் தளபதியின் விஜயம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஜோ பைடன் முன்னிலையில்!

## ட்ரம்ப் சர்ச்சைக் கருத்துக்கள்



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள முடிவுகளின் அடிப்படையில், ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் முன்னிலையில் உள்ளார்.

இதேவேளை மிகுந்த எதிர்பார்ப்புடன் இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியிட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பின்தங்கி இரண்டாம் நிலையில் உள்ளார்.

அதன் அடிப்படையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனுக்கு இதுவரையில், 264 இடங்களில் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் டொனால்ட் ட்ரம்ப்புக்கு 214 இடங்களில் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ பதிவுகள் தெரிவிக்கின்றன.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மாகாணங்களான புளோரிடா, லோவா, டெக்ஸ்சாஸ், ஓஹியோ உள்ளிட்ட மாகாணங்களை டொனால்ட் ட்ரம்ப் கைப்பற்றியுள்ள போதும் அவருக்கு பின்னடைவே ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அரிஸோனா, மிச்சிகன், நியூ ஹம்ஷ்ர் உள்ளிட்ட மாகாணங்கள் ஜோ பிடன் வசமாகியுள்ளன.

இதேவேளை தேர்தல் முடிவுகள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ள கருத்துக்கள் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன.

எதிர்த்தரப்பினர் தேர்தல் வெற்றியைத் திருடுவதற்கு முயற்சிக்கின்றனர் எனவும் அதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் ருவிட்டர் பக்கத்தில் அவர் நேற்று தெரிவித்திருந்த கருத்துக்கு ருவிட்டர் நிர்வாகம் தனது கண்டனங்களை வெளியிட்டிருந்தது.

மேலும், தேர்தல் முடிவுகள் தொடர்பான சர்ச்சைகளுக்கு முடிவுகளை பெற அவர் நீதிமன்றத்தை நாடுவார் எனவும் அவர் நேற்றைய தினம் அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் இந்தத் தேர்தல் தொடர்பிலான உத்தியோகபூர்வ இறுதி முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்கொரிய பிரதிநிதி அமெரிக்கா விஜயம்!

### தேர்தல் பரப்புரைக்கு மத்தியிலும்

தேர்தல் பரபரப்புக்கு மத்தியில் தென் கொரியாவின் உயர்மட்ட பிரதிநிதி அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன் அடிப்படையில் தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் காங் – கியுங் வாஹ் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டன் பயணமாகவுள்ளார் எனத் தென் கொரிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்த நிலையில், அமெரிக்க ராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ திட்டமிட்டிருந்த தென்கொரிய விஜயம் ரத்து செய்யப்பட்டது.

இதனையடுத்து மைக் பொம்பியோவின் அழைப்பின் பேரில் தென் கொரிய வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

## பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியுள்ளது!

### ஜப்பான் மனவருத்தம்

பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொண்டமை மிகவும் மனவருத்தத்துக்கு உரியது என ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் உயர்மட்ட ஊடகப் பேச்சாளர் காற்னோபு கட்டோ இன்று இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் – காலநிலை மாற்றம் தொடர்பிலான விடயங்கள் ஒற்றை நாட்டுக்கான ஒன்றல்ல. இது ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. - எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், 'இந்தப் பின்னணியில், அமெரிக்கா பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொண்டமை மிகவும் மனவருத்தத்துக்கு உரியது' என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்று வாக்கெண்ணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா முறையாக விலகிக் கொள்வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று அறிவித்தார். இதேவேளை இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்ளும் முதல் நாடு அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க தேர்தல் வாக்கு எண்ணல் எந்த வெளிநாட்டு தலையீடும் கிடையா!

### கிறிஸ்டோஃபர் க்ரெப்ஸ் தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், எந்த வெளிநாட்டு சக்தியும் வாக்கு எண்ணிக்கையில் மாற்றம் செய்ததாக ஆதாரம் கிடைக்கவில்லை என அமெரிக்க உட்துறையின் சைபர் பிரிவின் தலைமை அதிகாரி கிறிஸ்டோஃபர் க்ரெப்ஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாகவே ரஷ்யாவின் இராணுவ உளவு அமைப்பு, இந்தத் தேர்தலில் மோசடி செய்யக்கூடுமென பலதரப்பாலும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த செய்தி வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க உட்துறையின் சைபர் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் –

எந்த அந்நிய சக்தியாலும், அமெரிக்கர்களை வாக்கு செலுத்தாமல் தடுக்கவோ அல்லது அவர்களின் வாக்குகளை மாற்றவோ இயலாது.

எந்த ஒரு வெளிநாட்டு சக்திகளும் வாக்கு எண்ணிக்கையில் தலையிடுவதையோ அல்லது முடிவுகளில் தலையிடுவதையோ தடுக்க நாங்கள் விழிப்புடன் உள்ளோம். அமெரிக்க மக்கள் தொடர்ந்து வரும் நாள்களிலும் அமைதி காக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ரஷ்ய தலையீடு இருந்ததாக அமெரிக்க உட்துறை முகாமைகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அதிகாரபூர்வமாக அமெ. விலகல்

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச நாடுகள் பாரிஸ் நகரில் மேற்கொண்ட பருவநிலை மாற்றத்திலிருந்து விலகும் முடிவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2017 ஆம் ஆண்டு அறிவித்தார்.

அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக நினைக்கும் நாடுகள், அதற்காக 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று அதில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்காவின் காத்திருப்புக் காலம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து, பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா அதிகாரபூர்வமாக விலகியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், புவியின் சராசரி வெப்பநிலையை 2 டிகிரி செல்ஸியஸ்க்குக் கீழே வைத்திருப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2016 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

அதற்காக, தங்களது நாடுகளின் தொழிற்சாலைகள் வெளியிடும் கரியமில வாயுவின் அளவைக் குறிப்பிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்த அந்த ஒப்பந்தத்தில் நாடுகள் ஒப்புக்கொண்டன. மேலும் அந்த ஒப்பந்தத்தில், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கையெழுத்திட்டன.

எனினும் இந்த ஒப்பந்தம் அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு இழப்பை ஏற்படுத்தும், அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் எனவும் ட்ரம்ப் குற்றம் சாட்டி வந்தார். மேலும் அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

## பதவிமாற்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தினார் பிடன்!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றியாளர் யார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன், தனது பதவி மாற்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

பொதுவாக ஜனாதிபதியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்கள் பதவி மாற்றத்துக்கான தயாரிப்புகளை மேற்கொள்ளும் குழு ஒன்றை உருவாக்க வேண்டும்.

இந்த வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது– 'பெருந்தொற்றிலிருந்து பொருளாதார மந்தநிலை மற்றும் இன அநீதி என இந்த நாடு பல தீவிரமான நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்த பதவிமாற்ற தயாரிப்புக் குழு பிடன் மற்றும் கமலா ஹாரிஸ் பதவியேற்ற முதல் நாளில் இருந்து தீவிரமாக செயற்பட்டு பணிகளை விரைவில் மேற்கொள்ளும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா புதன்கிழமையன்று, அதிகாரபூர்வமாக அந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியுள்ள நிலையில், தனது முதல் நாள் பணியில், அமெரிக்கா பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இணையும் என பைடன் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடனும் போட்டியிட்டுள்ளனர்.

இந்நிலையில், இழுபறிநிலை காணப்பட்ட சில மாநிலங்களில் தேர்தல் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றன.

வேட்பாளர் ஒருவிரின் வெற்றிக்கு 270 இடங்கள் தேவையென்ற நிலையில் தற்போது ஜோ பைடன் 264 இடங்களைக் கைப்பற்றி டொனால்ட் ட்ரம்பை விட மேலும் முன்னிலை பெற்றுள்ளார். ட்ரம்ப் 214 இடங்களைக் கைப்பற்றியுள்ளார்.



# நாட்டை முடக்காமல் கொரோனாவை கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும்!

## அரச மருத்துவர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.05

முழு நாட்டையும் முடக்காமல் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

ஆரம்பத்தில் நாட்டின் 24 மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஆனால், இன்று நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையானது நாடு எவ்வளவு ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது என்பது எமக்குத் தெரிகின்றது.

ஒக்ரோபர் மாதம் முதலாவதாக கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா தொற்று தற்போது பல்வேறு காரணங்களால் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவி இருக்கின்றது. அத்துடன் 356 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 56 பிரிவுகளில் தொற்று ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று தற்போது 120 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் எம் மத்தியில் சில குறைபாடுகள் காணப்படுவதன் காரணமாகவே தொற்று இவ்வாறு பரவலடைந்துள்ளது.



நாம் இந்த விடயத்தில் கூடிய அவதானம் செலுத்தப்படாவிட்டால் மேலும் இரு வார காலப்பகுதியில் முழு நாட்டிலும் கொரொனா தொற்றாளர்கள் இணங்காணப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

அதனால் நாம் இந்த நேரத்தில் முழு நாட்டையும் முடக்காமல் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தநிலை மேலும் மோசமடையும் சந்தர்ப்பத்தில் முழு நாட்டையும் முடக்கும் நிலை ஏற்படும். ஆகையால் நாட்டை முழுமையாக முடக்காது தொற்றைக் கட்டுப்படுத்தும் காரணிகள் தொடர்பாக அதிக அவதானம் செலுத்த வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசை விமர்சிப்பதற்கு தகுதியற்றது எதிர்க்கட்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் தெரிவிப்பு



அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சினருக்கு எந்தவித தகுதியும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

உலகின் பல்வேறு நாடுகள் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இருந்த போதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் பாரிய நம்பிக்கையுடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றாளர்களை துரிதமாக அடையாளம் காண்பது மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு நோய் பரவாமல் இருப்பது போன்றவற்றில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடடுக்குள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எனவே கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தைக் குறை கூறுவதற்கோ விமர்சிப்பதற்கோ சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு எந்தவிதத் தகுதியும் கிடையாது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதி இந்தியாவுக்கு வழங்குவதை எதிர்த்து ஜனாதிபதிக்குக் கடிதம்!

## துறைமுக சேவைகள் பொது ஊழியர் சங்கம் அனுப்பியது

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவின் தனியார் நிறுவனத்துக்கு வழங்குவதை எதிர்த்து ஜனாதிபதிக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை துறைமுக சேவைகள் பொது ஊழியர் சங்கத்தால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் பராமரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது வழங்கிய வாக்குறுதிகளை இப்போது மறந்துவிட்டது என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# வாகன வருமான அனுமதிப் பத்திர விநியோகம் மேல் மாகாணத்தில் தொடர்ந்தும் இடைநிறுத்தம்!

மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதி பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுப்பரவலை அடுத்து, மேல் மாகாணத்தில் வாகன வருமான அனுமதி பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு மற்றும் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல்வரை மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, www.motortraffic.wp.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வாகன வருமான அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கபட்டுள்ளது.

# வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் 127 பேருக்குக் கொரோனாத் தொற்று!

வவுனியாவில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் இதுவரையில் 127 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கடந்த ஒக்ரோபர் மாதம் 1,154 பேர் வவுனியா பம்பைமடு இராணுவமுகாம், பெரியகட்டு இராணுவமுகாம், வேலங்குளம் விமானபடைத்தளம், பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரி ஆகிய நான்கு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 127 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த அனைவரும் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 990 பேர் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து தங்களது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில், வேலங்குளம் முகாமில் மாத்திரம் 37 பேர் வரையில் தனிமைப்படுத்தலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் வசிப்பவர்களுக்கும் கொரோனா நிதி 5 ஆயிரம் ரூபா!

கொழும்பில் வசிப்பவர்களில் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு நகரில் உள்ள 18 அஞ்சல் மற்றும் உப அஞ்சல் நிலையங்கள் ஊடாக பொலிஸ் மற்றும் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அதற்கமைய இன்று (வியாழக்கிழமை) முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 13 ஆயிரம் பேர் பலன்பெறவுள்ளனர் என கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் 9 இற்குப் பின்னர் ஊரடங்கைத் தளர்த்துவதற்கான வாய்ப்பு?

## கூறுகின்றார் இராணுவத் தளபதி

மேல் மாகாணத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதியின் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கை தளர்த்துவதற்கான வாய்ப்பு அதிகளவில் இருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

9ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு பின்னர் மேல் மாகாணத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு தொடர்ந்து இதனை முன்னெடுப்பதற்கான எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறை பரவியுள்ள வைரஸானது சுகாதார அமைச்சு கூறும் பிரகாரம் நாம் அணியும் முகக்கவசம் தவறுதலாக அணியப்பட்டால் கூட வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



அதன் அடிப்படையில் மேல் மாகாணத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீக்க வேண்டுமாயின் அதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2020 இல் வெளியிடப்பெற்றது.